Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன், டிசம்பர் 31, 2025 | இதழ் 262

## இந்தியா தலைமையில் 2026 பிரிக்ஸ் பிளஸ் உச்சி மாநாடு. சென்னை ரஷ்ய தூதர் வலேரி கோட்ஜேவுடன் பிரிக்ஸ் ஜெனரேஷன் குழுவினர் சந்திப்பு

சென்னை, 31 டிசம்பர் 2025: சென்னையிலுள்ள ரஷ்ய தூதர் வலேரி கோட்ஜேவை, பிரிக்ஸ் ஜெனரேசன் குழுவின் நிறுவனர், தலைவர் ஆர்.முத்துக்குமார் தலைமையிலான குழுவினர் சந்தித்து, இந்தியா தலைமையில் 2026 பிரிக்ஸ் பிளஸ் உச்சி மாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய உத்திகள் குறித்து ஆலோசித்தனர்.

மக்களிடையே ராஜதந்திர உறவு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, பிரிக்ஸ் ஜெனரேஷன் அமைப்பின் உயர் மட்டக் குழுவினர், சென்னையில் உள்ள ரஷ்ய கூட்டமைப்பின் தூதர் வலேரி கோட்ஜேவ் அவர்களைச் சந்தித்துப் பேசினர். இந்தியா தலைமை வகிக்கவுள்ள 2026-ஆம் ஆண்டு பிரிக்ஸ் பிளஸ் உச்சிமாநாட்டை முன்னிட்டு, சிவில் சமூக முன்னெடுப்புகளை அதற்கேற்ப ஒருங்கிணைப்பது குறித்து இந்தச் சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது.

2026 க்கான திட்ட வரைவு

பிரிக்ஸ் ஜெனரேஷன் அமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவர் ஆர். முத்துக்குமார் தலைமையிலான இந்த தூதுக்குழு, தென்னிந்தியாவில் பிரிக்ஸ் கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான விரிவான திட்ட வரைபடத்தை சமர்ப்பித்தது. இந்த நிகழ்வில் அமைப்பின் துணைத் தலைவர் உமா பாலு, பொருளாளர் தொழிலதிபர் எம். பாலசுப்ரமணியன், கர்நாடக இசைக்கலைஞர் டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம், வணிக ஆலோசகர் எஸ். சுனில் மற்றும் நீர் மேலாண்மை நிபுணர் டி.வி. ரவிசங்கர் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



இந்தக் குழுவினர் முன்வைத்த முன்மொழிவில் கலாச்சாரப் பரிமாற்றம், வர்த்தக மேம்பாடு மற்றும் இளைஞர் நலன் ஆகிய 3 முக்கிய அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. குறிப்பாக, தமிழ்நாட்டின் உள்ளூர் திருவிழாக்கள் மற்றும் கல்வித் திட்டங்களை பிரிக்ஸ் 2026 நிகழ்ச்சி நிரலுடன் இணைப்பது, தமிழ்நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ரஷ்யா மற்றும் பிற பிரிக்ஸ் நாடுகளின் சந்தைகளில் ஈடுபடுவதற்கான புதிய வாய்ப்புகளைக் கண்டறிவது மற்றும் 2026 உச்சிமாநாட்டின் தொலைநோக்குப் பார்வை குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்ற திட்டங்கள் விவாதிக்கப்பட்டன.

மனிதநேயத்திற்கு முன்னுரிமை

சந்திப்பின் யூடாக்கத்தில், தூதர் கோட்ஜேவுக்கு மலர்க்கொத்து வழங்கி புத்தாண்டு வாழ்த்துகளை பிரிக்ஸ் ஜெனரேசன் குழுவினர் தெரிவித்தனர். 2024-ஆம் ஆண்டின் இறுதியில் பதவியேற்ற கோட்ஜேவ், சென்னை - விளாடிவோஸ்டாக் கிழக்கு கடல்சார் வழித்தடத்தை மேம்படுத்துவதிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய கூட்டாண்மையை ஆழப்படுத்துவதிலும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்.

இந்த முன்னெடுப்புகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், சென்னையில் உள்ள ரஷ்ய கலாச்சார மையத்தில் (ரஷ்யன் ஹவுஸ்) நடைபெறவுள்ள நிகழ்வுகளில் பங்கேற்க பிரிக்ஸ் ஜெனரேஷன் குழுவினருக்கு தூதர் அழைப்பு விடுத்தார். மேலும், இருதரப்பு வர்த்தகம் மற்றும் மனிதாபிமான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட கூட்டு கருத்தரங்குகளை நடத்த தூதரகம் ஆதரவு வழங்கும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

இந்தியா 2026-ல் 18-வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டை நடத்தத் தயாராகி வரும் வேளையில், பிரிக்ஸ் ஜெனரேஷன் Www.bricsgen.org போன்ற லாப நோக்கற்ற அமைப்புகளின் செயல்பாடுகள், உயர் மட்டக் கொள்கைகளுக்கும் அடிமட்ட மக்களுக்கும் இடையிலான ஒரு பாலமாகப் பார்க்கப்படுகின்றன. இந்தியா தனது தலைமையின் போது முன்வைக்க விரும்பும் "மனிதநேயத்திற்கு முன்னுரிமை" என்ற அணுகுமுறைக்கு இத்தகைய சிவில் சமூக ஈடுபாடுகள் மிகவும் அவசியம் என்றும் தூதர் கோட்ஜேவ் பெருமையுடன் குறிப்பிட்டார்.

## ரஷ்ய அதிபரின் இல்லம் தாக்கப்பட்டது குறித்து பிரதமர் நரேந்திர மோடி கவலை தெரிவித்துள்ளார்

சென்னை, 31 டிசம்பர் 2025: ரஷ்ய அதிபரின் இல்லம் தாக்கப்பட்டது குறித்த செய்தியையடுத்து, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

பகைமையை களைவதற்கும், நீடித்த அமைதியை ஏற்படுத்தவும், தற்போதைய ராஜ்ய ரீதியிலான முயற்சிகள்தான் சாத்தியமிக்க வழி என்று திரு. மோடி சுட்டிக்காட்டியுள்ளார். இதில் தொடர்புடைய அனைவரும் இம்முயற்சிகளில் கவனம் செலுத்துமாறும், அவற்றை பலவீனப்படுத்தக்கூடிய எந்தவொரு செயல்களையும் தவிர்க்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் திரு மோடி எழுதியிருப்பதாவது:



"ரஷ்ய அதிபரின் இல்லம் தாக்கப்பட்டது குறித்த செய்திகள் மிகவும் கவலையளிக்கிறது. பகைமையை களைவதற்கும், நீடித்த அமைதியை ஏற்படுத்தவும், தற்போதைய ராஜ்ய ரீதியிலான முயற்சிகள்தான் சாத்திமிக்க வழியாகும். இதில் தொடர்புடைய அனைவரும் இம்முயற்சிகளில் கவனம் செலுத்துமாறும், அவற்றை பலவீனப்படுத்தக்கூடிய எந்தவொரு செயல்களையும் தவிர்க்குமாறும் நாங்கள் வலியுறுத்துகிறோம்."

## பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் பேகம் கலிதா ஜியா மறைவுக்கு பிரதமர் இரங்கல்

சென்னை, 31 டிசம்பர் 2025: பங்களாதேஷ் முன்னாள் பிரதமரும், பங்களாதேஷ் தேசிய கட்சி தலைவருமான பேகம் கலிதா ஜியா டாக்காவில் காலமானார். அவரது மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் திரு மோடி குறிப்பிட்டிருப்பதாவது:

"பங்களாதேஷ் முன்னாள் பிரதமரும், பங்காளதேஷ் தேசிய கட்சி தலைவருமான பேகம் கலிதா ஜியா மறைவு செய்தி கவலையளிக்கிறது.

அவருடைய குடும்பத்ினருக்கும், பங்களாதேஷ் மக்கள் அனைவருக்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கல். இறைவன் இந்த துயரமான இழப்பை தாங்கிகொள்வதற்கான சக்தியை அவரது குடும்பத்தினருக்கு அளிக்கட்டும்.




பங்களாதேஷின் முதல் பெண் பிரதமராக அந்நாட்டின் வளர்ச்சிக்கும், இந்தியா - பங்களாதேஷ் இடையேயான உறவுக்கும் அவர் ஆற்றிய முக்கிய பங்களிப்புகள் என்றும் நினைவு கூரப்படும்.

2015-ம் ஆண்டு டாக்காவில் அவருடனான எனது சந்திப்பை நான் நினைவு கூர்கிறேன். அவருடைய தொலைநோக்குப் பார்வை, பாரம்பரியம் ஆகியவை நமது கூட்டாண்மைக்கு தொடர்ந்து வழிகாட்டும்.

அவருடய ஆன்மா சாந்தியடையட்டும்."

## நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பணியாற்ற அனைவரும் உறுதியேற்க வேண்டும்- குடியரசுத் தலைவர்

சென்னை, 31 டிசம்பர் 2025: ஜார்க்கண்ட் மாநிலம் கும்லாவில் மாநிலங்களுக்கு இடையேயான கலாச்சார ஒன்றுகூடல் விழா - கார்த்திக் ஜாத்ராவை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், ஜார்க்கண்டில் பகவான் பிர்சா முண்டாவின் பிறந்த இடம், செயலாற்றிய இடம் ஆகியவற்றிற்கு செல்வது தமக்கு யாத்திரை செல்வது போன்ற உணர்வை அளிப்பதாக கூறினார். சமூக நீதிக்கும் பழங்குடியினப் பெருமைக்கும் ஒரு சிறந்த அடையாளமாக அவர் நம் அனைவராலும் போற்றப்படுகிறார் என்று அவர் தெரிவித்தார். பங்கராஜ் சாஹேப் கார்த்திக் ஓரன், பகவான் பிர்சா முண்டாவின் குறிக்கோள்களுக்கு ஏற்ப பழங்குடியின உணர்வையும் அடையாளத்தையும் வலுப்படுத்தினார் என்று தெரிவித்தார். கார்த்திக் ஓரன் தமது வாழ்நாளை பழங்குடியின சமூகத்தின் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்தார் என்று அவர் கூறினார். அவர் கல்வியை பரப்புவதிலும், சமூக ஒற்றுமையை வலுப்படுத்துவதிலும் பாடுபட்டார் என்று அவர் தெரிவித்தார். அவருடைய குறிக்கோள்களைப் பின்பற்றி, சமூகம் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பணியாற்றுவோம் என்று நாம் உறுதி ஏற்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.



இந்த பிராந்தியத்தைச் சேர்ந்த சிறந்த பழங்குடியின வீரர்களின் பட்டியல் மிகவும் நீளமானது என்று அவர் குறிப்பிட்டார். பழங்குடியினர் அருங்காட்சியகங்களை நிறுவுவதன் மூலம், அவர்களின் வீரக் கதைகளை நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

எனினும், இந்த பிராந்தியத்தைச் சேர்ந்த மற்றும் இதர அனைத்துப் பிராந்தியங்களைச் சேர்ந்த பழங்குடியின வீரர்களின் பங்களிப்புகள், நாட்டின் இளைஞர்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் அறியச் செய்வதை உறுதி செய்வது, பழங்குடியின சமூகத்தின் பாரம்பரியத்துடன் தொடர்புடைய அனைத்து தனிநபர் மற்றும் நிறுவனத்தின் பொறுப்பாகும் என்று குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

## ஸ்ரீ நாராயண குருவின் போதனைகள் மூலம் இளைஞர்கள் உத்வேகம் பெறவேண்டும் - குடியரசுத் துணைத்தலைவர்

சென்னை, 31 டிசம்பர் 2025: கேரள மாநிலம் வர்க்கலாவில் உள்ள சிவகிரி மடத்தில் 93-வது சிவகிரி யாத்திரையை குடியரசுத் துணைத்தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று தொடங்கி வைத்தார். அப்போது பேசிய அவர், சிவகிரியை வெறும் ஒரு புனித யாத்திரைத் தலமாக மட்டுமின்றி, ஸ்ரீ நாராயண குருவால் கற்பனை செய்யப்பட்ட ஒரு வாழும் தத்துவமாகவும், சமூக விழிப்புணர்வின் பயணமாகவும் திகழ்வதாக விவரித்தார்.

சிவகிரி, ஆன்மீகத் தேடலையும் சமூகப் பொறுப்பையும் இணக்கமாக ஒருங்கிணைப்பதன் அடையாளமாகத் திகழ்கிறது என்றும் குடியரசுத் துணைத் தலைவர் கூறினார்.

சிவகிரி யாத்திரை ஒரு சடங்கு சார்ந்த செயலாக மட்டுமின்றி, கல்வி, தூய்மை, அமைப்பு, உழைப்பு, சுயமரியாதை ஆகியவற்றின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு இயக்கமாகவே கருத்தாக்கம் செய்யப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீ நாராயண குருவால் எழுப்பப்பட்ட ஒரு சக்திவாய்ந்த கேள்வி சமூகத்தை மாற்றியமைத்தது என்று குடியரசுத் துணைத் தலைவர் குறிப்பிட்டார். ஒரு மனிதனை மற்றொரு மனிதனை விடத் தாழ்வாக ஏன் நடத்த வேண்டும்? என்ற அநீதிக்கும், பல நூற்றாண்டுகால பாகுபாட்டிற்கும் பதிலளிக்கும் விதமாக "மனித சமுதாயத்திற்கு ஒரே சாதி, ஒரே மதம், ஒரே கடவுள்." என்று அவர் குறிப்பிட்டதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

குருவின் புரட்சி அமைதி நிறைந்ததாகவும், கருணை மிக்கதாகவும், மாற்ற முடியாததாகவும், கண்ணியம், சமத்துவம் மற்றும் மனிதநேயத்தில் வேரூன்றியதாகவும் இருந்தது என்று அவர் கூறினார்.

ஆன்மீகம் மற்றும் பகுத்தறிவின் இந்த ஒருங்கிணைப்பு, குருவை ஒரு துறவியாக மட்டுமின்றி, எதிர்காலத்திற்கான ஒரு வழிகாட்டியாகவும் ஆக்கியது என்று அவர் கூறினார்.

இந்தியாவின் நாகரிகப் பண்புகளை எடுத்துரைத்த குடியரசுத் துணைத் தலைவர், இந்திய ஆன்மீகம் எப்போதும் அன்பையே மிக உயர்ந்த வழிபாட்டு வடிவமாக வைத்துள்ளது என்று தெரிவித்தார். ஸ்ரீ நாராயண குரு இந்தத் தத்துவத்தை செயல்கள் மூலம் வாழ்ந்து காட்டினார் என்றும், சமூகத்திற்குச் செய்யும் சேவையே சடங்குகளை விடச் சிறந்தது என்றும், சக மனிதர்கள் மீதான அன்பே பக்தியின் உண்மையான வடிவம் என்றும் அவர் நிரூபித்தார் என்றும் குறிப்பிட்டார்.

கேரளா உலகிற்கு அளித்த மாபெரும் பங்களிப்புகள் ஆதி சங்கராச்சாரியார் மற்றும் ஸ்ரீ நாராயண குரு ஆவர் என்றும், அவர்களின் தத்துவங்கள் மனித சமூகத்திற்குத் தொடர்ந்து உத்வேகம் அளித்து வருவதாகவும் குடியரசுத் துணைத் தலைவர் கூறினார்.

இந்தியாவில் யாத்திரை என்பது சுற்றுலா அல்ல, அது ஒரு மாற்றத்திற்கானது என்று குறிப்பிட்ட குடியரசுத் துணைத் தலைவர், சிவகிரி இந்த நாகரிக உண்மையை எடுத்துக்காட்டுவதாக குறிப்பிட்டார். பல நூற்றாண்டுகளாகத் துறவிகள் பிராந்தியங்கள் மற்றும் மொழிகளைக் கடந்து சுதந்திரமாகப் பயணம் செய்து, மதங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தில் வேரூன்றிய இந்தியாவின் நீடித்த வலிமையை வலுப்படுத்தினர் என்று அவர் குறிப்பிட்டார். ஸ்ரீ நாராயண குருவின் போதனைகள் மூலம் இளைஞர்கள் உத்வேகம் பெற வேண்டும் என்றும் குடியரசுத் துணைத் தலைவர் வலியுறுத்தினார்.



# அறிமுகம் கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்ட் : மொபைல் கண்டுபிடிப்புகளில் அடுத்து என்ன என்பதற்கான வடிவம்.

சென்னை 31, டிசம்பர் 2025: சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் இன்று கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்ட்-ஐ அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது, இது மொபைல் ஏஐ சகாப்தத்திற்கான புதிய வடிவ காரணிகளில் சாம்சங்-ன் தலைமையை மேலும் விரிவுபடுத்துகிறது. ஒரு தசாப்த கால மடிக்கக் கூடிய வகை கண்டுபிடிப்புகளில் கட்டமைக்கப்பட்ட கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்ட், பல மடிப்பு வடிவமைப்பின் தனித்துவமான தேவைகளுக்கு உகந்ததாக அதன் மிகவும் மேம்பட்ட மடிக்கக் கூடிய தொழில்நுட்பங்களுடன் பொறியியல் தேர்ச்சியைக் காட்டுகிறது. அதன் மெல்லிய சுயவிவரம் அல்ட்ரா செயல்திறனை வழங்கும் பிரீமியம் தொலைபேசியின் பெயர்வுத்திறனை உறுதி செய்கிறது, மேலும் இரண்டு முறை விரிக்கப்படும்போது, உற்பத்தித்திறன் மற்றும் சினிமா பார்வையை உயர்த்தும் ஒரு அதிவேக 10-இன்ச் டிஸ்ப்ளேவை வெளிப்படுத்துகிறது - வேறு எந்த வடிவ காரணியிலும் இதற்கு முன் கண்டிராத சிறந்த மொபைல் அனுபவத்தை வழங்குகிறது.

"புதிய சாத்தியக் கூறுகளுக்கான சாம்சங்-இன் இடைவிடாத நாட்டம் மொபைல் அனுபவங்களின் எதிர் காலத்தை தொடர்ந்து வடிவமைக்கிறது," என்று சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ்-ன் தலைமை நிர்வாக அதிகாரி, தலைவர் மற்றும் சாதன அனுபவ (டிஎக்ஸ்) பிரிவின் தலைவர் டிஎம் ராய் கூறினார். "மடிக்கக் கூடிய வடிவ காரணிகளில் பல வருட புதுமைகள் மூலம், கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்ட் மொபைல் துறையின் நீண்டகால சவால்களில் ஒன்றைத் தீர்க்கிறது - ஒரே சாதனத்தில் எடுத்துச் செல்லக்கூடிய தன்மை, பிரீமியம் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றுக்கு இடையேயான சரியான சமநிலையை வழங்குகிறது. கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்ட் இப்போது மொபைல் வேலை, படைப்பாற்றல் மற்றும் இணைப்புக்கு சாத்தியமானவற்றின் எல்லைகளை விரிவுபடுத்துகிறது."

பல தசாப்த கால மொபைல் நிபுணத்துவத்துடன் எதிர் காலத்தை வடிவமைத்தல்

சாம்சங் நீண்டகாலமாக மொபைல் துறையை வழிநடத்தி வருகிறது, பெரிய திரை சாதனங்கள், மடிக்கக் கூடிய வடிவ காரணிகள் மற்றும் மொபைல் சாதனத்தில் ஏஐ இன் பயன்பாடு போன்ற புதிய பிரிவுகள் மற்றும் அனுபவங்களை முன்னோடியாகக் கொண்டுள்ளது, இந்த கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றும் பயனரை மனதில் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளன. அதிநவீன ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, முழுமையான உற்பத்தி மற்றும் கடுமையான தரக் கட்டுப்பாடு ஆகியவற்றின் ஆதரவுடன், கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்ட், எடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும்போது வெளியீட்டை அதிகப்படுத்தும் தொலைபேசிக்கான புதிய




அளவுகோல்களை சாம்சங் எவ்வாறு தொடர்ந்து அமைக்கிறது என்பதைக் காட்டுகிறது.

சாம்சங்கின் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு செயல்பாட்டில், மக்கள் சாதனங்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதன் மூலம் புதுமை இயக்கப்படுகிறது. மடிக்கக்கூடிய வகை கண்டுபிடிப்புகளில் நிறுவனத்தின் தசாப்த கால அனுபவம் கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்டின் தனித்துவமான பல-மடிப்பு வடிவ காரணியை ஊக்கப்படுத்தியது, இது பிரதான காட்சியைப் பாதுகாக்க உள்நோக்கி மடிப்பு வடிவமைப்பைப் பயன்படுத்துகிறது. மடிப்பு வழிமுறை எளிதாகத் திறப்பதற்கும் மூடுவதற்கும் துல்லியமாக வடிவமைக்கப் பட்டுள்ளது, ஒரு தானியங்கி அலாரம் தொடர்ச்சியான திரை எச்சரிக்கைகள் மற்றும் அதிர்வுகள் மூலம் பயனருக்கு தவறான மடிப்பு குறித்து எச்சரிக்கிறது. ஒவ்வொரு விவரமும் ஒரு உள்ளுணர்வு, பயனர் நட்பு அனுபவத்தை வழங்க துல்லியமாகவும் நோக்கத்துடனும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதன் மிக மெல்லிய புள்ளியில் வெறும் 3.9 மிமீ அளவைக் கொண்ட கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்ட், கேலக்ஸிக்கான தனிப்பயனாக்கப்பட்ட ஸ்னாப்டிராகன்டி 8 எலைட் மொபைல் தளத்தால் இயக்கப்படும் முதன்மை நிலை செயல்திறனை வழங்குகிறது, இது 200 எம்பி கேமரா மற்றும் மடிக்கக்கூடிய தொலைபேசியில் சாம்சங் இதுவரை வைத்திருந்த மிகப்பெரிய பேட்டரி ஆகும். 5,600 எம்ஏஹெச் மூன்று செல் பேட்டரி அமைப்பு, சாதனத்தின் 3 பேனல்களிலும் சமச்சீர் மின்சாரம் மற்றும் நாள் முழுவதும் நீடித்து உழைக்க வைக்கப்பட்டுள்ளது. 45 டபிள்யு அதிவேக சார்ஜிங்குடன் இணைந்து, கேலக்ஸி இசட் ட்ரைஃபோல்ட் பயனர்கள் வரம்புகள் இல்லாமல் ஸ்ட்ரீம் செய்ய, உருவாக்க மற்றும் வேலை செய்ய அனுமதிக்கிறது.

ஒரு மெல்லிய, எடுத்துச் செல்லக்கூடிய சட்டகத்தில் ஒரு மிகத் தரமான சாதனத்தின் சக்தியை சமநிலைப் படுத்த, மைய மடிக்கக் கூடிய தொழில்நுட்பத்தின் மறு-உகப்பாக்கம் பயன்படுத்தப் பட்டது.

சாதனத்தின் ஒவ்வொரு பகுதியும் கட்டமைப்பு புதுமை மற்றும் தயாரிப்பு உத்தரவாதத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வடிவமைக்கப்பட்டது.

# மெட்ரோக்களில் 10 நிமிடங்களில் கேலக்ஸி சாதனங்களை உடனடி டெலிவரி செய்ய இன்ஸ்டாமார்ட்டுடன் சாம்சங் கூட்டு சேர்ந்துள்ளது

சென்னை 31, டிசம்பர் 2025: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், இந்தியாவின் முன்னோடி விரைவு வர்த்தக தளமான இன்ஸ்டாமார்ட்டுடன் ஒரு கூட்டணியை இன்று அறிவித்துள்ளது, இதன் மூலம் கேலக்ஸி ஸ்மார்ட்போன்கள், டேப்லெட்டுகள், அணியக்கூடிய பொருட்கள் மற்றும் ஆபரணங்களின் பரந்த அளவிலான தயாரிப்புகளை முக்கிய நகரங்களில் உடனடியாகக் கிடைக்கச் செய்ய சாம்சங் விரைவான மற்றும் வசதியான அணுகலை வழங்கும். வாடிக்கையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கேலக்ஸி சாதனங்களை இன்ஸ்டாமார்ட்டில் ஆர்டர் செய்து சில நிமிடங்களில் தங்கள் வீட்டு வாசலில் டெலிவரி செய்யலாம்.

"சாம்சங்கில், அனைவருக்கும் அணுகக்கூடிய அர்த்தமுள்ள புதுமைகளால் நாங்கள் இயக்கப்படுகிறோம். இன்ஸ்டாமார்ட்டுடனான எங்கள் கூட்டாண்மை எங்கள் ஓம்னிசேனல் உத்தியை வலுப்படுத்துவதற்கும், கேலக்ஸி அனுபவத்தை சில நிமிடங்களில் பயனர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கும் மற்றொரு படியாகும். எங்கள் மிகவும் விரும்பப்படும் சாதனங்களை பயனர்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருகிறோம்" என்று சாம்சங் இந்தியாவின் எம்எக்ஸ் வணிக இயக்குநர் ராகுல் பஹ்வா கூறினார்.

"இன்ஸ்டாமார்ட்டில், எங்கள் நுகர்வோரின் மாறிவரும் வாழ்க்கை முறைகளை எதிர்பார்த்து அதற்கேற்ப மாற்றியமைப்பதே எங்கள் குறிக்கோளாக இருந்து வருகிறது. சாம்சங்குடன் நேரடியாக கூட்டு சேர்வதன் மூலம், உயர்தர சாதனங்கள் இப்போது ஒரு சில தட்டுகள் மற்றும் 10 நிமிட தூரத்தில் இருப்பதை உறுதி செய்கிறோம், தொழில்நுட்பத்தில் வசதி உண்மையில் என்ன அர்த்தம் என்பதை மறுவரையறை செய்கிறோம்," என்று இன்ஸ்டாமார்ட்டின் துணைத் தலைவர் மனேந்தர் கௌஷிக் கூறினார்.




வேகம் மற்றும் அணுகலை மதிக்கும் நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அதன் சர்வசேனல் இருப்பை விரிவுபடுத்துவதற்கும் சாம்சங்கின் உறுதிப்பாட்டுடன் இந்த கூட்டாண்மை ஒத்துப்போகிறது.

இன்ஸ்டாமார்ட்டுடன் கூட்டு சேர்ந்து சாம்சங் அதன் சில்லறை வணிக சூழலை வலுப்படுத்து கிறது மற்றும் விலைப் பிரிவுகளில் உள்ள நுகர்வோர் கேலக்ஸி தொழில்நுட்பத்தை வசதியுடன் அனுபவிக்க முடியும் என்பதை உறுதி செய்கிறது.

# சாம்சங் இந்தியாவில் கேலக்ஸி டேப் ஏ11 ஐ அறிமுகப்படுத்துகிறது: அன்றாட பயன்பாட்டிற்கான நேர்த்தியான மற்றும் சுத்திகரிக்கப்பட்ட டேப்லெட்.

சென்னை 31, டிசம்பர் 2025: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், இன்று கேலக்ஸி டேப் ஏ11 ஐ அறிமுகப்படுத்தியது, இது அனைத்து வயதினருக்கும் பயனர்களுக்கு அற்புதமான பொழுதுபோக்கு, மென்மையான செயல்திறன் மற்றும் பல்துறை திறனை ஒன்றிணைக்கும் ஒரு டேப்லெட்டாகும்.

கேலக்ஸி டேப் ஏ11, 90 ஹெச்இசட் புதுப்பிப்பு வீதத்தைக் கொண்ட 8.7" டிஸ்ப்ளேவுடன் வருகிறது, இது எந்த லைட்டிங் நிலையிலும் இணையற்ற பார்வை மற்றும் மென்மையான ஸ்க்ரோலிங் அனுபவத்தை வழங்குகிறது - நீங்கள் இணையத்தில் உலாவினாலும், சமூக ஊடகங்களைப் பார்த்தாலும் அல்லது உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளை ஸ்ட்ரீமிங் செய்தாலும். கேலக்ஸி டேப் ஏ11, டால்பி-இன்ஜினியரிங் செய்யப்பட்ட இரட்டை ஸ்பீக்கர்களையும் கொண்டுள்ளது, அவை திரைப்படங்கள், இசை அல்லது வீடியோ அழைப்புகளுக்கு ஏற்ற, பணக்கார, பல பரிமாண ஆடியோவை வழங்குகின்றன.

6என்எம்-அடிப்படையிலான ஆக்டா-கோர் செயலியால் இயக்கப்படும் கேலக்ஸி டேப் ஏ11, வேகமான மற்றும் ஆற்றல்-திறனுள்ள செயல்திறனை வழங்குகிறது, தடையற்ற பல்பணிக்கு ஏற்றது. இது நீண்ட அமர்வுகள் உலாவல், கேமிங் மற்றும் பிங்-வாட்ச்சிங்கை ஆதரிக்கும் 5100எம்ஏஹெச் பேட்டரியையும் கொண்டுள்ளது.




கேலக்ஸி டேப் ஏ11 கூர்மையான, தெளிவான வீடியோ அழைப்புகளுக்கு 5எம்பி முன் கேமராவுடன் வருகிறது. நீங்கள் குடும்பத்தினருடன் பழகினாலும் அல்லது உங்கள் குழுவுடன் ஒத்துழைத்தாலும், மேம்படுத்தப்பட்ட தெளிவு ஒவ்வொரு வெளிப்பாட்டையும் உயிரோட்டமான விவரங்களில் பார்க்க உங்களை அனுமதிக்கிறது.

கிளாசிக் கிரே மற்றும் சில்வர் நிறங்களில் கிடைக்கும் கேலக்ஸி டேப் ஏ11, 8 ஜிபி வரை நினைவகத்தை வழங்குகிறது, இது வேகமான மற்றும் தடையற்ற பல்பணியை செயல்படுத்துகிறது. இது 128 ஜிபி சேமிப்பகத்துடன் வருகிறது, பெரிய கோப்புகளுக்கு ஏராளமான இடத்தை வழங்குகிறது. கூடுதலாக, பயனர்கள் மைக்ரோ எஸ்டி கார்டு மூலம் சேமிப்பை 2 டிபி வரை விரிவாக்கலாம்.

கேலக்ஸி டேப் ஏ11 சாம்சங்.காம், அமேசான், பிளிப்கார்ட் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில்லறை விற்பனைக் கடைகளில் கிடைக்கும்.

# ரஷ்ய அதிபர் புடின் வீடு மீது உக்ரைன் ட்ரோன்கள் தாக்குதல்: இது நல்லதல்ல-டிரம்ப் ஆவேசம்

சென்னை, 31 டிசம்பர் 2025: ரஷ்ய அதிபர் புடின் வீட்டை குறிவைத்துத் தாக்குதல். இது நல்லதல்ல, நான் மிகவும் கோபமாக இருக்கிறேன் என டிரம்ப் கூறினார்.

ரஷ்யாவின் வடமேற்கு நோவ்கோரோட் பகுதியில் உள்ள ரஷ்ய அதிபர் புடினின் வீட்டை உக்ரைன் தாக்க முயன்றதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறி இருந்தார். அவர், "91 ட்ரோன்கள் மூலம் புடினின் அரசு இல்லத்தை உக்ரைன் தாக்கியது. இந்தத் தாக்குதல் ரஷ்யாவின் அமைதிப் பேச்சுவார்த்தை நிலைப்பாட்டை பாதிக்கும்' என்றார்.

புடினின் வீட்டை குறி வைத்த அனைத்து ட்ரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டது. யாருக்கும் காயம் ஏற்படவில்லை என ரஷ்ய ராணுவம் தகவல் தெரிவித்துள்ளது. இதனை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி மறுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ரஷ்யா மீண்டும் தனது வேலையைத் தொடங்கியுள்ளது. அதிபர் டிரம்பின் குழுவுடனான நமது கூட்டு ராஜதந்திர முயற்சிகளின் அனைத்து சாதனைகளையும் சீர்குலைக்க, அது ஆபத்தான குற்றச்சாட்டை சுமத்துக்கிறது. அமைதியை உருவாக்க நாங்கள் தொடர்ந்து ஒன்றாகச் செயல்பட்டு வருகிறோம். புடினின் வீடு மீதான தாக்குதல் ஒரு புனைகதை. அவர்கள் பொய் சொல்கின்றனர்.

எங்கள் மீது அவர்கள் நடத்தும் தாக்குதல்களை நியாயப்படுத்தவும், அத்துடன் போரை முடிவுக்குக் கொண்டு வரத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க ரஷ்யா மறுப்பதை நியாயப் படுத்தவும் முயற்சிக்கிறது. இது ரஷ்யாவின் வழக்கமான பொய்கள். மேலும், ரஷ்யர்கள் கடந்த காலங்களில் எங்களது அமைச்சரவை கட்டடத்தை ஏற்கனவே குறிவைத்துள்ளனர்.

உக்ரைன், ராஜதந்திரத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை எடுப்பதில்லை. மாறாக, ரஷ்யா எப்போதும் அத்தகைய நடவடிக்கைகளையே எடுக்கிறது. இது எங்களுக்கிடையேயான பல வேறுபாடுகளில் ஒன்றாகும். இந்த நேரத்தில் உலக நாடுகள் மவுனமாக இருக்கக் கூடாது என்பது மிகவும் முக்கியம். நிலையான



அமைதியை உருவாக்க மேற்கொள்ளப்படும் பணிகளை ரஷ்யா சீர்குலைப்பதை நாம் அனுமதிக்க முடியாது. இவ்வாறு ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

இது நல்லதல்ல!

இது குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறுகையில், தனது வீட்டை உக்ரைன் ட்ரோன்கள் தாக்குதல் நடத்த குறிவைத்தது என்று ரஷ்ய அதிபர் புடின் என்னிடம் கூறினார். இது நல்லதல்ல. நான் மிகவும் கோபமாக இருக்கிறேன் என்று கூறினார்.

# தொழில்நுட்ப கோளாறு: சென்ட்ரல் – விமான நிலைய மெட்ரோ ரெயில் சேவை ரத்து

சென்னை, 31 டிசம்பர் 2025: தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சென்ட்ரல் ரெயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் செல்லும் மெட்ரோ ரெயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் சேவையானது நீலம் மற்றும் பச்சை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கிமலைக்கு பச்சை வழித்தடத்தில் ரெயில்கள் இயக்கப்படுகின்றன. அதேபோல் விம்கோ நகரில் இருந்து சைதாப்பேட்டை வழியாக விமான நிலையத்துக்கு நீல வழித்தடத்தில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

இந்த நிலையில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பச்சை வழித்தட மெட்ரோ ரெயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, சென்ட்ரல் மற்றும் கோயம்பேடு வழியாக விமான நிலையம் செல்லும் மெட்ரோ ரெயில் சேவை மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பச்சை வழித்தடம் (அண்ணா நகர், கோயம்பேடு வழியாக) வழியாக விமான நிலையத்திற்கு செல்லும் பயணிகள் ஆலந்தூர் மெட்ரோ நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து நீல வழித்தடத்தை பயன்படுத்தி




விமான நிலையம் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கோளாறை சரிசெய்ய தொழில்நுட்பப் பணியாளர்கள் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர். விரைவில் கோளாறு சரிசெய்யப்பட்டு, சேவை இயல்பு நிலைக்கு திரும்பும். பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு நாங்கள் வருந்துகிறோம்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# பிரிட்டானியா கேக் ஸ்பெஷல் தருணங்களை மேலும் சிறப்பான மறக்க முடியாததாக நினைவுகளாக மாற்றுகிறது!

சென்னை 31, டிசம்பர் 2025: விடுமுறை காலம் வந்துவிட்டது; முன்பைக் காட்டிலும் அதிக மாயாஜாலத்துடன் பிரிட்டானியா கேக்ஸ் அதன் புதிய பிரச்சாரத்துடன் களமிறங்கியுள்ளது; இந்த புதிய விளம்பரமானது குடும்பத்தினர் ஒன்றாக இருப்பதில் உள்ள இரகசிய மேஜிக்கை கொண்டாடும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது. இல்லங்கள் பண்டிகையின் உற்சாகத்துடன் மிளிரும் நேரத்தில், எளிமையான கொண்டாட்டங்களைக் கூட ஒரு அர்த்தமுள்ள மற்றும் மறக்கமுடியாத அனுபவங்களாக மாற்ற பிரிட்டானியா கேக்குகள் எப்படி உதவுகின்றன என்பதை இந்த விளம்பரப் பிரச்சாரம் எடுத்துக்காட்டுகிறது.

டபுள் சாக்கோ சிப், வெஜ் பிளம் கேக் மற்றும் நட் & ரெய்சின் கேக் ஆகிய மூன்று புதிய பண்டிகைக் கால சிறப்பு கேக் வகைகள் இந்த விளம்பரத்தில் அறிமுகம் செய்யப்படுகின்றன.. முந்திரி, பாதாம் மற்றும் திராட்சை ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பிரிட்டானியாவின் இந்த பண்டிகைக் கால கேக்குகள் கொண்டாட்டத்தின் முக்கிய அம்சமாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன; இவை அன்பளிப்பாக வழங்க, விருந்தில் பகிர அல்லது நீங்களே சாப்பிட்டு மகிழ மிகவும் ஏற்றது. எனவே இந்த பண்டிகைக் காலத்தில் எல்லோரும் கொஞ்சம் இனிமை கூடுதலாக கிடைப்பதை பிரிட்டானியாவின் இந்த சிறப்பு கேக்குகள் உறுதி செய்கின்றன.




ஷ்பாங் நிறுவனத்தால் கருத்தாக்கம் செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட இந்த பிராண்ட் திரைப்படம் பண்டிகை தருணத்திற்கே உரிய பிளம் கேக்கை மையமாகக் கொண்டுள்ளது; மேலும் ஒரு எளிமையான கொண்டாட்டத்தினை அன்புக்குரியவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது, உண்மையிலேயே அது எப்படி ஒரு மேஜிக் தருணமாக மாறுகிறது என்பதையும் அழகாக காட்டுகிறது. விஸ்தாரமான மற்றும் கற்பனையான உலகினை உருவாக்க மேம்பட்ட ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) இந்த விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. Google Veo, Nano Banana Pro மற்றும் Kling போன்ற தளங்கள் பல்வேறு காட்சியமைப்புகளை சாத்தியமாக்கி இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் இதில் பல்வேறு லேயர்களை கொண்ட காட்சிகளில் மூழ்கி ரசிக்கும் அனுபவத்தை வழங்கியுள்ளது. இந்த அணுகுமுறையானது ஒரு பாரம்பரிய படப்பிடிப்பிற்கு அப்பால் புதுமையான படைப்பாற்றலின் எல்லைகளைத் விரிவாக்கம் செய்துள்ளது; இதனால் விஷுவலாக ஒரு மாயாஜால அனுபவத்தையும் சூழலையும் உருவாக்க முடிந்தது.

# கரூர் பலி: டெல்லி சிபிஐ அலுவலகத்தில் 2-வது நாளாக தவெக நிர்வாகிகள் ஆஜர்

சென்னை 31, டிசம்பர் 2025: கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் வழக்கில் விசாரணைக்காக டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் 2வது நாளாக இன்றும் ஆஜராகியுள்ளனர்.

டெல்லியில் நேற்று ஆஜரான தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், தேர்தல் தலைமை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா, இணைப் பொதுச் செயலாளர் நிர்மல் குமார், கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் ஆகியோரிடம் 8 மணிநேரத்துக்கு மேலாக விசாரணை நீடித்தது. கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான வழக்கை சிபிஐ விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இது தொடர்பாக கரூரில் முகாமிட்டு சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரித்து வந்தனர்.

ஏற்கெனவே கரூரில் வைத்து ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அவர்கள் டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் விசாரணைக்கு நேரில் ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டது.

இதையடுத்து தவெக நிர்வாகிகள் ஆனந்த் உள்ளிட்டோர் நேற்று டெல்லி சிபிஐ அலுவலகத்தில் ஆஜராகினர். இவர்களுடன் கரூர் மாவட்ட ஆட்சியர் எம். தங்கவேல், கரூர் மாவட்ட கண்காணிப்பாளர் ஜோஷ் தங்கய்யா, ஏடிஎஸ்பி பிரேம் ஆனந்தன், டிஎஸ்பி வி. செல்வராஜ், கரூர் நகர காவல் ஆய்வாளர் ஜி. மணிவண்ணன் உள்ளிட்ட அதிகாரிகளும் விசாரணைக்கு ஆஜராகினார்கள்.

நேற்றைய விசாரணையில் பிரச்சார கூட்டத்துக்கு விஜய் தாமதமாக வந்தது ஏன்? அவர் வருவதில் தாமதம் இருந்தால் அதற்கான காரணம் என்ன? பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன செய்யப்பட்டன? கூட்ட அனுமதி எப்படி பெறப்பட்டது? கூட்டத்துக்கு எத்தனை பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது? போன்ற பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து 2வது நாளாக இன்றும் விசாரணை தொடர்ந்து வருகின்றது. இன்றும் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் ஆஜராகியுள்ளனர்.

# டெல்லியில் பனிமூட்டம்: 118 விமானங்கள் ரத்து

சென்னை 31, டிசம்பர் 2025: டெல்லியில் இன்று அடர் பனிமூட்டத்துக்கான சிவப்பு எச்சரிக் கையை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள நிலையில், 118 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக அடர் பனிமூட்டம் மற்றும் மோசமான காற்று மாசுபாடு காரணமாக டெல்லி மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் டெல்லி மற்றும் என்சிஆர் பகுதிகளில் இன்று பிற்பகல் வரை அடர் பனிமூட்டத்துக்கான சிவப்பு எச்சரிக்கையை இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது. இதன் காரணமாக, டெல்லி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்படும் 60 விமானங்களும், வருகைதரவிருந்த 58 விமானங்களும் ரத்து செய்யப்பட்டிருப்பதாக ஏர் இந்தியா, இண்டிகோ உள்ளிட்ட பல்வேறு விமான நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. மேலும் 16 விமானங்கள் மோசமான வானிலை காரணமாக வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளது. வானிலை சற்று சீரான பிறகு படிப்படியாக விமான சேவைகள் இயக்கப்படும் என டெல்லி விமான நிலையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. டெல்லி மட்டுமின்றி அரியாணா, உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களில் கடும் பனிமூட்டம் காரணமாக விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ரெயில்களும் தாமதமாக இயக்கப்பட்டு வருகின்றன.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# சாம்சங் சிஇஎஸ் கண்காட்சியில் செயற்கை நுண்ணறிவு சாதனங்களின் அடுத்த கட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது, மேலும் தொலைக்காட்சிகளின் எல்லைகளை விரிவுபடுத்த உள்ளது: ஜேபி பார்க்

கோயம்புத்தூர் 31, டிசம்பர் 2025: - உலகின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் கண்காட்சியான சிஇஎஸ்-ல், சாம்சங் தனது சாதன அனுபவப் பிரிவுக்கான 2026 ஆம் ஆண்டுக்கான தொலைநோக்குப் பார்வையையும், அதன் புதிய செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வாடிக்கையாளர் அனுபவங்களையும் வெளியிடத் தயாராக உள்ளது.

சாம்சங் தென்மேற்கு ஆசியாவின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஜேபி பார்க் கூறியதாவது, "சாம்சங் செயற்கை நுண்ணறிவு சாதனங்கள் மற்றொரு திருப்புமுனையை நெருங்கி வருகின்றன. இவை பயனர்களின் அன்றாட வாழ்க்கையை ஆழமாகப் புரிந்துகொண்டு, அன்றாட வாழ்வின் மதிப்பை கணிசமாக மேம்படுத்தும் தனித்துவமான அனுபவங்களை வழங்குகின்றன. இந்த அடுத்த கட்டம், உலகின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கண்காட்சியான சிஇஎஸ் 2026-ல் வெளியிடப்படும். மேலும், ஜனவரி 4, 2026 அன்று லாஸ் வேகாஸில் நடைபெறும் 'தி ஃபர்ஸ்ட் லுக்' நிகழ்வில் தொலைக்காட்சிகளின் எல்லைகளையும் நாங்கள் விரிவுபடுத்துவோம்."

சிஇஎஸ் கண்காட்சியில், சாம்சங், செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் தனிப்பயனாக்கப்பட்ட கவனிப்பு மற்றும் சக்தி வாய்ந்த வன்பொருள் ஆதரவு செயல்திறன் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் வீட்டு வாழ்க்கை மேம்பாடுகளின் வரிசையை முன்னிலைப்படுத்தும். நாங்கள் எங்கள் பெஸ்போக் ஏஐ வீட்டு உபயோக சாதனங்களின் வரிசையை, புத்திசாலித்தனமான துணி பராமரிப்பு, உள்ளுணர்வு வெப்பநிலை கட்டுப்பாடு மற்றும் மிகவும் வசதியான துப்புரவு அனுபவங்கள் மூலம் மேம்படுத்துவோம். இவை அனைத்தும் அதன் சாதனங்களுக்கு இடையேயான தடையற்ற ஒருங்கிணைப்பு மூலம் பயனர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.

சிஇஎஸ் கண்காட்சியில் இடம்பெறும் புதுமைகளில் மேம்படுத்தப்பட்ட பெஸ்போக் ஏஐ ஏர்டிரெஸ்ஸர், பெஸ்போக் ஏஐ லாண்டரி காம்போ, பெஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீ ப்ரோ ஏர் கண்டிஷனர் மற்றும் முதன்மை பெஸ்போக் ஏஐ ஜெட் பாட் ஸ்டீம் அல்ட்ரா ரோபோ வெற்றிட கிளீனர் ஆகியவை அடங்கும்.

தொடர்ந்து 20 ஆண்டுகளாக தொலைக்காட்சிகளில் உலகின் முன்னணி நிறுவனமாக விளங்கும் சாம்சங், விரிவுபடுத்தப்பட்ட மைக்ரோ ஆர்ஜிபி டிவி வரிசையையும் காட்சிப்படுத்த உள்ளது. இந்த புதிய விரிவான வரம்பு, சாம்சங்கின் மைக்ரோ ஆர்ஜிபி டிஸ்ப்ளே தொழில்நுட்பத்தின் அடுத்த பரிணாமத்தை அறிமுகப்படுத்துகிறது, இது பிரீமியம் வீட்டுப் பார்வைக்கு ஒரு புதிய தரத்தை அமைக்கிறது.



சாம்சங் நிறுவனம் மேம்படுத்தப்பட்ட ஏஐ விஷன் அம்சத்துடன் கூடிய புதிய பெஸ்போக் ஏஐ ரெஃப்ரிஜரேட்டர் ஃபேமிலி ஹப்-ஐயும் அறிமுகப்படுத்த உள்ளது. இந்த அம்சத்தின் முக்கிய மேம்பாடு, கூகிள் ஜெமினி மூலம் உருவாக்கப்பட்ட அதன் செயல்பாடுகள் தான். ஒரு குளிர்சாதனப் பெட்டியில் இந்த அம்சம் ஒருங்கிணைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

மேம்படுத்தப்பட்ட ஏஐ விஷன் மூலம், சாம்சங் உணவுப் பொருட்களை அடையாளம் காண்பதில் அதிகத் திறமை பெற்று, சமையலறை அனுபவங்களின் வரம்பை விரிவுபடுத்துகிறது. முன்னதாக, இது சாதனத்திலேயே 37 வகையான புதிய உணவுப் பொருட்களையும், முன்பே பதிவு செய்யப்பட்ட 50 வகையான பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களையும் அடையாளம் காண முடிந்தது. சிஇஎஸ் கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட உள்ள சமீபத்திய பதிப்பு, அதிக உணவுப் பொருட்களை அடையாளம் காணும் வகையில், அதன் தற்போதைய வரம்புகளைத் தாண்டி, ஒரு விரிவான மற்றும் நெகிழ்வான அனுபவத்தை வழங்குகிறது.

சாம்சங் நிறுவனம் இந்தியாவில் 10,000-க்கும் மேற்பட்ட திறமையான பொறியாளர்களைப் பணியமர்த்தியுள்ளது என்றும், அவர்கள் அடுத்த 30 ஆண்டுகளுக்கு சாம்சங் நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ள செயற்கை நுண்ணறிவு மாற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் திரு. பார்க் கூறினார்.

"இந்தியாவில் எங்களிடம் மூன்று ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களும், ஒரு வடிவமைப்பு மையமும் உள்ளன. இவை இந்தியாவின் கண்டுபிடிப்புகளுக்கு மட்டுமல்லாமல், உலகளாவிய தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பத்திற்கும் பங்களிக்கின்றன. நாங்கள் ஸ்மார்ட் வீடுகள், இணைக்கப்பட்ட வாழ்க்கை மற்றும் செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் அறிவார்ந்த சாதனங்களில் கவனம் செலுத்துவதால், உலகளாவிய கண்டுபிடிப்புகளுக்குத் தலைமை தாங்குவதில் இந்தியா ஒரு முக்கியப் பங்கு வகிக்கும் என்று நான் நம்புகிறேன்," என்று அவர் மேலும் கூறினார்.

# 2024-25 நிதியாண்டில் கடன்சுமை குறைந்து வங்கிகளின் செயல்பாடு அதிகரிப்பு. மத்திய ரிசர்வ் வங்கி தகவல்

சென்னை 31, டிசம்பர் 2025: 2024-25 நிதியாண்டில் கடன் சுமை குறைந்து நாட்டின் வணிக வங்கிகளின் செயல்பாடு அதிகரித்துள்ளதாக மத்திய ரிசர்வ் வங்கி தகவல் தெரிவித்துள்ளது.

வங்கிகள் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக செயல்படுகின்றன. மக்களிடமிருந்து சேமிப்புகளை திரட்டி, அவற்றை தொழில்கள், விவசாயம், வணிகம் மற்றும் தனிநபர்களுக்கு கடனாக வழங்குவதன் மூலம், பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான நிதி ஓட்டத்தை வங்கிகள் உறுதி செய்கின்றன.

முதலீடுகளை ஊக்குவிப்பது, வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவுவது, தொழில் உற்பத்தியை மேம்படுத்துவது, நிதி நிலைத்தன்மையை பாதுகாப்பது, அரசின் நிதி மற்றும் ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கைகள் செயல்பட வங்கிகள் பெரும் பங்காற்றி வருகின்றன.

வங்கித் துறை வலுவாக இருந்தால், நாட்டின் பொருளாதாரமும் வலுவாக இருக்கும்.

90 நாட்களுக்கு மேல் வட்டி அல்லது அசல் தொகை செலுத்தப்படாமல் இருக்கும் கடன்களில் மொத்த மதிப்பே மொத்த செயல்படாத கடன்கள் எனப்படும். வங்கிகளின் மொத்த செயல்படாத கடன்கள் விகிதம் குறைந்தால் கடன் வசூல் மேம்பட்டு வங்கியின் சொத்து தரம் உயர்ந்துள்ளதாக அர்த்தம். நாட்டின் பொருளாதாரம் வலுவாக இருப்பதை இது உறுதி செய்யும். 2024-25 நிதியாண் டில் வங்கிகளின் மொத்த செயல்படாத கடன்கள் குறைந்து செயல்பாடு அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.




இந்தாண்டு மார்ச்சுடன் முடிவடைந்த 2024-25 நிதியாண்டில் மொத்த செயல்படாத கடன்கள் 2.2 சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இது பல ஆண்டுகளில் இல்லாத அளவு குறைவாகும். "இந்திய வங்கித் துறையின் நிலை மற்றும் முன்னேற்றம் 2024-25" என்ற அறிக்கையில், 2024-25 காலகட்டத்தில் வங்கித் துறை வலுவான சமநிலைப் பட்டியல், தொடர்ச்சியான லாபம் மற்றும் மேம்பட்ட சொத்துத் தரம் ஆகியவற்றுடன் திடமாக செயல்பட்டதாக தெரிவித்துள்ளது.

வங்கி கடன் மற்றும் வைப்பு வளர்ச்சி இரட்டை இலக்கங்களில் தொடர்ந்தாலும், வளர்ச்சி வேகம் சற்றே மந்தமானது. மூலதனம் மற்றும் திரவத்தன்மை பாதுகாப்பு அளவுகள் அதிகமாக இருந்தன. 2024-25ல் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் நிகர லாபம் 14.8 சதவீதம் உயர்ந்து ரூ.4.01 லட்சம் கோடி ஆகியுள்ளது. 2023-24-ல் வங்கிகளின் நிகர லாபம் ரூ.3.5 லட்சம் கோடியாகும்.

வங்கிகளின் லாபத்தை கணிக்கும் சொத்து மீதான வருமானம் 1.4 சதவீதம் அதிகரித்துள்ளது. பங்குதாரரர் முதலீடு மீதான வருமானம் 13.5 சதவீதம் ஆகும். அபாய எடையிட்ட சொத்துகளுக்கு எதிரான மூலதன விகிதம் மார்ச் 2025 முடிவில் 17.4 சதவீதமாக இருந்தது.

# திருத்தணியில் வட மாநில இளைஞர் மீது கொடூரத் தாக்குதல்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

சென்னை 31, டிசம்பர் 2025: திருத்தணி ரயில் நிலையம் அருகே இரு தினங்களுக்கு முன்பு புறநகர் ரயிலில் பயணம் செய்த வடமாநில இளைஞரை போதையில் இருந்த நான்கு சிறுவர்கள் கத்தியால் வெட்டி கொடூரமாகத் தாக்கி அதனை வீடியோ எடுத்து இணைய பக்கத்தில் வெளியிட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை அளிக்கிறது. கொடும் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவது ஆறுதல் அளிக்கிறது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு சிறுவர்களை போலீசார் கைது செய்துள்ளனர். இந்த கொடூரமான செயலில் ஈடுபட்ட சிறுவர்கள் கஞ்சா போதையில் இருந்ததாகவும், கைபேசி மூலம் கத்தியை வைத்து மிரட்டுவது போல் ரீல்ஸ் எடுத்ததாகவும் அப்போது அந்த வடமாநில இளைஞர் முறைத்ததாகவும், அவரை திருத்தணி ரயில் நிலையத்தில் இறக்கி ரயில் குடியிருப்பு பகுதியில் அழைத்துச் சென்று கத்தியால் வெட்டி படம் பிடித்து இணைய பக்கத்தில் ரீல்ஸ் வெளியிட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இந்த கொலைவெறித் தாக்குதலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

தமிழகத்தில் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பல்வேறு சமூகக் குற்றங்களுக்கு ஆளாவதில் போதைப் பொருள் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது. தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ள கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனையை அறவே ஒழிப்பதற்கு சட்டவிரோதமாக விற்பனை செய்யும் கும்பல்கள் மீது கடுமையான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டுமெனவும்; போதைப் பொருட்களுக்கு எதிராக இளைஞர்கள், சிறுவர்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும்; வட மாநில தொழிலாளர்கள் பணிபுரியும் இடங்கள், குடியிருப்புகள் உள்ளிட்டு அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்திடவேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழக அரசையும், காவல் துறையையும் வலியுறுத்துகிறது.

ரயில் பயணங்களின் போது இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் இனி நடக்காமலிருக்க ரயில்வே காவல்துறையினர் உரிய கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி பயணிகள் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டுமெனவும், கடுமையான வெட்டுக் காயங்களுடன் சிகிச்சைப் பெற்று வரும் இளைஞருக்கு உரிய மருத்துவ சிகிச்சையும், அவரது வாழ்வாதாரத்திற்கு உரிய இழப்பீடு அளித்திட வேண்டுமெனவும் ரயில்வே நிர்வாகத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

# கோவையில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!




சென்னை 31, டிசம்பர் 2025: கோவையில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில், சுமார் 11 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.137 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார். அப்போது அவர், 1,500 மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகளுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் - 1500 பொதுமக்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் - 211 மாற்றுத் திறனாளி சகோதர சகோதரிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்டுள்ள ஸ்கூட்டர்கள் வாகனம் மற்றும் செவித்திறன் கருவிகள் - கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், ஆணைகள் உட்பட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்வின் போது, ரூ.163 கோடி மதிப்பில் பணி நிறைவுபெற்ற திட்டங்களை திறந்து வைத்து, ரூ.32 கோடி மதிப்பிலான புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு: கோவை மாவட்டத்தில் நடைபெறுகின்ற இந்தச் சிறப்பான அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் வந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் என் அட்வான்ஸ் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கோவையில் சுமார் 11,000 பயனாளிகளுக்கு 137 கோடி ரூபாய் அளவிலான நலத்திட்ட உதவிகளை இந்த நிகழ்ச்சியில் வழங்க இருக்கிறோம். அதே போல 163 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவு பெற்றுள்ள பணிகளை எல்லாம் இன்றைக்கு மக்கள் பயன்பாட்டிற்கு நாம் அளிக்க இருக்கிறோம். மேலும் 32 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டித் துவக்கி வைக்கிறோம்.

கோவை மீது தனிப் பாசம் முத்தமிழறிஞர் கலைஞராக இருக்கட்டும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாக இருக்கட்டும், என்றைக்குமே இந்த கோவை மீது அவர்களுக்குத் தனிப் பாசம் உண்டு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப் பேற்ற நாள் முதல் அடிக்கடி சொல்கின்ற ஒரேயொரு விஷயம், "வாக்களித்த மக்கள் மகிழும்படி மட்டுமல்ல, வாக்களிக்காத மக்களும் 'நமக்கு வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே' என்று வருந்துகின்ற அளவிற்கு நான் ஆட்சி செய்வேன்" னுன்பது தான். அந்த அடிப்படையில் இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவே தமிழ்நாட்டை உற்றுநோக்குகின்ற வகையில், நம்முடைய முதலமைச்சர் இந்தத் திராவிட மாடல் ஆட்சியைச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

மகளிர் மேம்பாடு குறிப்பாக, மகளிர் மேம்பாட்டிற்காக ஏராளமான திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். ஆட்சிக்கு வந்தவுடன் நம்முடைய முதலமைச்சர் இட்ட முதல் கையெழுத்து மகளிர்க்கான விடியல் பயணத் திட்டத்திற்குத்தான். விடியல் பயணத் திட்டத்தின் மூலம் இந்த நான்கரை ஆண்டுகளில் மகளிர் சுமார் 900 கோடி பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதம் குறைந்தது 1,000 ரூபாய் வரை இந்தத் திட்டத்தின் மூலம் சேமிக்கிறார்கள்.

காலை உணவுத் திட்டம்தாய்மார்கள் தினமும் காலையில் எழுந்து குழந்தைகளுக்குச் சமைப்பதற்குச் சிரமப்படக் கூடாது என்று அரசுப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின் மூலம் இன்று ஒவ்வொரு நாளும் சுமார் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புதுமைப் பெண் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வந்தால் மட்டும் போதாது, உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக, அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சேர்ந்து பயின்றாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத் தொகையாக மாதம் 1,000 ரூபாய் வழங்கும் திட்டத்தை உருவாக்கினார். அதேபோல் மாணவர்களுக்காகத் தமிழ்ப் புதல்வன் திட்டத்தையும் துவக்கி வைத்தார். இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 8 லட்சம் மாணவ மாணவிகள் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

மடிக்கணினிகள்

இன்று இன்னொரு முக்கியமான விஷயம், கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். கல்லூரி மாணவ மாணவிகளின் கல்விக்குத் துணை நிற்கின்ற வகையில், இன்னும் சில நாட்களில் இந்த வருடம் மட்டும் 10 லட்சம் அதிநவீன மடிக்கணினிகள் மாணவர்களுக்கு வழங்க இருக்கிறோம். இதை மாணவர்கள் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற ஒரு திட்டம், அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இன்று தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

# சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் நியமன மசோதா: 3 ஆண்டுகளுக்கு பின் திருப்பி அனுப்பினார் ஜனாதிபதி

சென்னை 31, டிசம்பர் 2025: சென்னை பல்கலைக் கழக துணைவேந்தர் நியமன விவகாரம் தொடர்பான சட்ட சபை சட்ட திருத்த மசோதாவை ஜனாதிபதி 3 ஆண்டுகளுக்கு பின் திருப்பி அனுப்பினார்.

தமிழக அரசு கடந்த 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், சென்னை பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதாவை சட்டசபையில் தாக்கல் செய்து நிறைவேற்றியது. இந்த சட்ட திருத்தத்தின் மூலம், சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனம் மற்றும் நீக்கம் தொடர்பான அதிகாரங்களை, வேந்தரான கவர்னரிடம் இருந்து மாநில அரசுக்கு மாற்றும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டு இருந்தன.

மேலும் அதில் பல்கலைக்கழக சிண்டிகேட்டில் நிதி செயலாளரை உறுப்பினராக சேர்ப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு இருந்தன.

தமிழக சட்டசபையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு, கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் கவர்னர் ஆர்.என்.ரவி அதற்கு ஒப்புதல் தராமல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தார். இந்தநிலையில் ஜனாதிபதி திரவுபதி முர்முவும், அந்த சென்னை பல்கலைக்கழக மசோதாவுக்கு ஒப்புதல் தராமல் திருப்பி அனுப்பி உள்ளார். சுமார் 3 ஆண்டுகளுக்கு பின் இந்த மசோதாவை ஜனாதிபதி, திருப்பி அனுப்பி இருக்கிறார். இதன் மூலம் இந்த சட்டத்திருத்த மசோதா அமலுக்கு வராத நிலை உருவாகி உள்ளது. இந்த விவகாரத்தில் தமிழக அரசு என்ன முடிவு எடுக்கப்போகிறது என்பது விரைவில் தெரியவரும்.

இதுகுறித்து சட்ட நிபுணர்கள் கூறியதாவது:- பொதுவாக கவர்னர் ஒரு மசோதாவை அரசுக்கு திருப்பி அனுப்பினால், அரசு அதனை மீண்டும் 2-வது முறை சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பும் போது அந்த மசோதாவுக்கு கவர்னர் கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற விதி உள்ளது. ஆனால் இது ஜனாதிபதிக்கு பொருந்தாது.

இந்த வேறுபாடு இந்திய அரசியலமைப்பின் பிரிவு 200 மற்றும் 201-ல் தெளிவாக உள்ளது. பிரிவு 200-ன் படி ஒரு மாநில சட்ட மசோதா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு கவர்னருக்கு அனுப்பப்பட்டால், அவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அல்லது ஒப்புதல் மறுத்து மீண்டும் பரிசீலனைக்காக சட்டசபைக்கு திருப்பி அனுப்ப வேண்டும் அல்லது ஜனாதிபதிக்கு அனுப்பலாம். அவர் திருப்பி அனுப்பும் மசோதாவை, சட்டசபை திருத்தம் இல்லாமல் 2-வது முறை நிறைவேற்றி அனுப்பினால் கவர்னர் ஒப்புதல் அளிக்க வேண்டியது கட்டாயம் ஆகும். அதாவது கவர்னருக்கு 2-வது முறையில் 'வீட்டோ' அதிகாரம் இல்லை.

பிரிவு 201-ன்படி கவர்னர் ஒரு மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்பினால் ஜனாதிபதி ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது ஒப்புதல் மறுக்கலாம் அல்லது மீண்டும் மாநில சட்டசபைக்கு திருப்பி அனுப்பலாம். ஆனால் ஜனாதிபதி மீண்டும் திருப்பி அனுப்பிய பிறகும், மாநில சட்டசபை அதனை மீண்டும் நிறைவேற்றி அனுப்பினால் கூட ஜனாதிபதி கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற விதி இல்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# நடப்பாண்டில் எல்.எச்.பி. பெட்டிகள் தயாரிக்கும் பணி 18 சதவீதம் அதிகரிப்பு: ரெயில்வே அதிகாரிகள் தகவல்



சென்னை 31, டிசம்பர் 2025: இந்திய ரெயில்வேயில் கடந்த ஆண்டைவிட, நடப்பாண்டில் எல்.எச்.பி. (இலகுரக) பெட்டிகள் தயாரிக்கும் பணி 18 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய ரெயில்வேயில் இயக்கப்படும் எக்ஸ்பிரஸ் ரெயில்களில், பழைய பெட்டிகள் நீக்கப்பட்டு எல்.எச்.பி எனப்படும் நவீன இலகுரக ரெயில் பெட்டிகள் இணைக்கப்பட்டு வருகின்றன. ஜெர்மன் தொழில்நுட்ப உதவியுடன் இந்தியாவில் தயாரிக்கப்படும் இந்த வகை பெட்டிகளின் எடை 52 டன்னுக்கும் குறைவானது. இதனால் மணிக்கு 160 கிலோ மீட்டர் வேகத்துடன் இந்த ரெயில் பெட்டிகளை எளிதாக இயக்க முடியும். பாதுகாப்பு மற்றும் சொகுசு வசதிகள் கொண்ட இந்த பெட்டிகள் எளிதில் தீப்பிடிக்காது. விபத்து நேரங்களில் கவிழ்ந்து விடாமல் தப்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எல்.எச்.பி 2-ம் வகுப்பு படுக்கை வசதி கொண்ட பெட்டியில் 80 இடங்களும், ஏ.சி. பெட்டியில் தூங்கும் வசதி கொண்ட 72 இடங்களும் இருக்கும். ஏற்கனவே, பல்வேறு முக்கிய எக்ஸ்பிரஸ் ரெயில்களில் எல்.எச்.பி பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. குறைவான சத்தத்தை மட்டுமே எழுப்பக்கூடியவை என்பதால் ரெயில் பயணிகளுக்கு கூடுதல் அமைதியை வழங்க கூடியதாகவும் இந்த வகை பெட்டிகள் உள்ளன.

இதுகுறித்து, ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:-

நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் (2025-26) வரையில் மொத்தம் 4 ஆயிரத்து 224-க்கும் மேற்பட்ட எல்.எச்.பி. பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது கடந்த நிதியாண்டில் தயாரிக்கப்பட்ட 3 ஆயிரத்து 590 பெட்டிகளை விட 18 சதவீதம் கூடுதலாகும். இதில் சென்னை பெரம்பூரில் உள்ள ஐ.சி.எப். தொழிற் சாலையில் 1,659 எல்.எச்.பி. ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளது ம் அடங்கும். கடந்த 2004 முதல் 2014 வரையிலான 10 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 300 எல்.எச்.பி பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2014-2025-ம் நிதியாண்டில் 42 ஆயிரத்து 600-க்கும் மேற்பட்ட எல்.எச்.பி பெட்டிகளை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சி ரெயில்வே துறையை நவீனமயமாக்குவதில் அதிக கவனம் செலுத்தப்படுவதை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# தங்கம் சவரனுக்கு ரூ.3,360 குறைந்தது: வெள்ளி விலையும் சரிந்தது



சென்னை 31, டிசம்பர் 2025: தொடர்ந்து ஏற்றம் கண்டு அதிர்ச்சி அளித்து வந்த தங்கம் விலை இன்று ஆறுதல் அளிக்கும் வகையில் குறைந்துள்ளது.

சென்னையில் இன்று 22 காரட் ஆபரணத் தங்கம் சவரனுக்கு ரூ.3,360 குறைந்து விற்பனையாகிறது. வெள்ளி விலையும் கணிசமாகக் குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார சூழல் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருவதால் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

அந்த வகையில் கடந்த 15ம் தேதி 22 காரட் ஆபரணத் தங்கம் ஒரு சவரன் ரூ.1,00,120 என வரலாறு காணாத உச்சம் தொட்டு விற்பனையானது. பின்னர் 28ந்தேதி ரூ. 1,04,800 என்ற மற்றுமொரு உச்சத்தைத் தொட்டது.

இந்த நிலையில் இன்று சென்னையில் 22 காரட் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.420 குறைந்து, ஒரு கிராம் ரூ.12,600-க்கும், சவரனுக்கு ரூ.3,360 குறைந்து ஒரு சவரன் ரூ.1,00,800-க்கும் விற்பனை ஆகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு 23 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி 258 ரூபாய்க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 58 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.